# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.

## O.S.No. 03/2020

2023ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 02 நாள் வாதி/பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.பழனிச்சாமி | தாலுகா | : |
| த/ பெயர் | : | கிராமம் | : |
| க/ பெயர் | : | | |
| வயது | : | மதம் | : |
| தொழில் | : | ஜாதி | : |

**வா.சா.1**
நாள் : 02.02.2023.
நேரம் : 11.55 AM

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 1ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

எனது பக்க ஆவணங்கள்

1. தாவா 1வது இலக்கத்திற்குரிய FMB வரைபடம் சான்றிட்ட நகல்(பிரதிவாதி வழக்கறிஞரால் கிராம அலுவலர் மூலமாகத்தான் குறியீடு செய்ய முடியும் என்ற ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது) வா.சா.ஆ.1.

2. வாதியின் தந்தைக்கு பாத்தியமான சர்வே எண்.378/8 க்குரிய நத்தம் பட்டா எண்.55 அசல் வா.சா.ஆ.2.

3. 2018-19 ஆண்டுக்குரிய சர்வே எண்.378/8-ல் உள்ள வீட்டுக்குரிய வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.3.

4. 2019-20 ஆண்டுக்குரிய சர்வே எண்.378/8-ல் உள்ள வீட்டுக்குரிய வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.4.

5. 2018–19 ஆண்டுக்குரிய சர்வே எண்.377/9–ல் உள்ள வீட்டுக்குரிய வீட்டுவரி ரசீது அசல் வா.சா.ஆ.5.

6. சர்வே எண்.377/9ல் உள்ள வீட்டுக்குரிய மின் கட்டண ரசீது அசல் வா.சா.ஆ.6 ஆகும்.

(கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

விசாரணை முடிவுற்ற நேரம்: 12.00 PM

சாட்சியின் கையொப்பம்